## வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு – 2015

வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் கையேற்கப்பட்டிருந்த சொத்தொன்று பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலைமைக்கு உட்பட்ட திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் அதற்கு இணங்காத வகையில் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்கு பெறுமானத்தேய்வு செய்யப்படாத வகையில் பெறுமானத்தேய்வுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ரூபா 6,140,059 தொகையான இயந்திரங்கள், தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன வருடாந்தம் 10 சதவீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்வதற்கு ஆணைக்குழுவினால் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருந்த போதிலும், அச்சொத்தக்களின் ஆயுட்காலம் தொடர்பாக தொடர்புபடுத்தப்பட்ட வீதத்தை தீர்மானிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2013 இன் 20 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்த) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் ஆணைக்குழு தீர்மானித்த 4 வரி மேன்முறையீடுகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய வரித்தொகையில் ஒரு பகுதியாக குத்தகையாளரால் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,915,915 ஆன 04 வங்கி பிணை வைப்புத் தொகை கையேற்கப்பட்டு அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறு அறவிடப்பட்ட தொகை நிதி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபையினால் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட 06 மாதங்களை விஞ்சிய வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 32,612 பெறுமதியான 3 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 8,099,294 பற்றாக்குறை யொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,236,558 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 24,335,852 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் தாபன மற்றும் நிர்வாகச் செலவினம் ரூபா 306,997 ஆல் அதிகரித்திருந்த போதிலும், திறைசேரி மானியங்கள் ரூபா 24,612,553 ஆல் குறைவடைந்தமையால் நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு அடிப்படையாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன், ஏதேனும் வரியொன்றோ, கட்டணமொன்றோ அல்லது தண்டமொன்றோ மற்றும் உரிய காரணம் தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தீர்மானமொன்றினால் அதிருப்தியடையும் எவரேனும் நபருக்கு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய முடியுமாக இருப்பதுடன் அவ்வாறு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். கணக்காய்விற்கு பெற்றுக்கொண்ட தகவல்களின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு

வரை ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் அளவு 209 ஆக இருந்ததுடன் அதில் தீர்வு காணப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 158 ஆக மாத்திரம் இருந்தமையால், 51 முறையீடுகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் போது கிடைத்த 59 மேன்முறையீடுகளில் 50 அதாவது 84 சதவீதம் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் போதியளவு செயலாற்றல் ஒன்று காண்பித்தமை தொடர்பில் அவதானிக்கப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேன்முறையீட்டு ஆணைக்குழு தாபிக்கப்பட்டிருந்த 2011 இன் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தில் ஆணைக்குழு நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் மற்றும் கணக்காய்வ செய்தல் தொடர்பான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்கவில்லை. உரிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்ட சட்டங்களை திருத்தம் செய்வதில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேன்முறையீடு செய்யப்படும் தொகைக்குரிய வரியிருப்பாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 சதவீத வைப்புத் தொகையும், கையேற்கப்பட்ட பிணை வைப்புத் தொகை தொடர்பாகவும் மேன்முறையீட்டின் பேரில் அறவிடப்படும் ரூபா 2,500 கட்டணம் உட்பட மொத்தம் ரூபா 38,177,251 ஆன மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ஐந்தொகையில் சொத்துக்களின் கீழ் வைப்பொன்றாக நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் நிதிக்கூற்றுக்களில் கணக்கு குறிப்புக்களில் இம்மீதிகள் தொடர்பாக வெளிப்படுத்தலொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேன்முறையீடொன்றை சமர்ப்பிக்கும் போது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதியில் 25 சதவீதத்திற்கு சமமான வங்கி பிணையொன்று சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் குறிப்பாக வழங்கப்பட்ட வரியை உறுதிப்படுத்தும் போது அது சபைக்கு கையேற்பது இடம் பெறும். மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிச்சயிக்கப்படாத மேன்முறையீடுகளுக்குரிய ஆணைக்குழுவிற்குச் சொந்தமான கையேற்கப்படாத வங்கி பிணை பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடீ/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு தொடர்பான உறுதிப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவினால் கூட்டிணைந்த திட்டமொன்றும் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் செயலாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை பேணுவதில் குறைபாடுகளாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பராமரிக்கப்படாமை, பேரேட்டுக் கணக்குகள் முறையாகப் பராமரிக்கப்படாமை, மேன்முறையீட்டு வைப்புக்கள் மற்றும் பிணைகள் தொடர்பாக போதியளவில் அறிக்கைகள் பேணப்பட்டிராமை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.